சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

முன்னிலை : திரு.K.நம்பிராஜன், பிஏ.,பி.எல்.,

சார்பு நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்

2023 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 01-ம் நாள், வெள்ளிக்கிழமை.

அசல் வழக்கு எண்.398//2023

CNR.No.TNTT19-002069-2023

கனரா வங்கி ஸ்ரீவைகுண்டம்

அதன் கிளை மேலாளர் மூலம், --- வாதி

/எதிர்/

1. A.சங்கரி

2. K.அருணாசலம் --- பிரதிவாதிகள்

இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தின் முன்னர் 22.11.2023 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தா.ஜனார்த்தனன் அவர்கள் முன்னிலையாகி இருந்து வந்த நிலையிலும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாததாலும், எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், பிரதிவாதிகளை பொறுத்து ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரையைக் கேட்டறிந்தும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது, பிராது தொகை விபரத்தில் கண்டுள்ளபடியான தொகை ரூ.2,55,867/-ம், அதற்கு வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை செலுத்தும் நாள்வரை 10.45% பின்வட்டியும் மற்றும் எதிர்கால வட்டியாக 2% வழக்கு செலவுத்தொகையும் கேட்டு வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. வழக்குரையின் சுருக்கம்</u> :-**

வாதி வங்கியிடம், பிரதிவாதி கல்வி கடன் கணக்கு எண்.117651018048-படி கடனுக்காக ரூ.60,000/- கேட்டு 05.12.2009-ம் தேதியன்று விண்ணப்பம் தாக்கல்

செய்தார் என்றும், 10.02.2010-ம் தேதியில் கடன் வகைக்காக 10% மற்றும் கூடுதல் வட்டிக்கு ஒப்புக்கொண்டு பிரதிவாதிகள் வாதி வங்கியிடம் ஒரு கொதுவை ஒப்பந்தம் பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்றும், பிரதிவாதி கடனை வட்டியுடன் செலுத்தும்படி பலமுறை வாதி வங்கி அலுவலர்கள் நேரில் கேட்டதில் பிரதிவாதி கடனை ஒழுங்காக செலுத்தவில்லை என்றும், பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி கடனை அசல் வட்டியுடன் திரும்ப செலுத்தாது 20.01.2023-ம் தேதிவரை ரூ.2,55,867/- பாக்கி போட்டுள்ளார் என்றும், பிரதிவாதி பெற்ற கடனை ஒப்புக்கொண்டு கடன் வகைக்காக 20.04.2013, 11.04.2016, 10.03.2019 மற்றும் 30.12.2021-ல் உயிர்ப்பு கடிதங்கள் வாதி வங்கிக்கு பிறப்பித்து கொடுத்துள்ளார் என்றும், எனவே, வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் கடன் வாக்கி தொகை ரூ.2,55,867/-ம் 20.01.2023 முதல் பின் வட்டியுடன் செலவு தொகையுடன் கேட்டு தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில், பிரதிவாதிகள் ஆஜாகாத நிலையில் பிரதிவாதி ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

4. இவ்வழக்கில், வாதி தரப்பில் வாதி வங்கியின் கிளை மேலாளர் திரு.அடோனி பிரைனார்ட் டேனியல் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. இவ்வழக்கில், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

6. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை யாதெனில், வழக்குரையில் கோரியவாறு வாதிக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

7) இவ்வழக்கில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை சார்ந்தும் வலியுறுத்தியும் சாட்சியமளித்து தனது தரப்பு வழக்கினை நிரூபிக்கும் வகையில் 05.12.2009-ம் தேதியன்று வாதி வங்கியிடம் பிரதிவாதி கொடுத்த கடன் விண்ணப்பத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 10.02.2010-ம் தேதியன்று வாதி வங்கியிடம் பிரதிவாதி பிறப்பித்து கொடுத்த கொதுவை ஒப்பந்ததின் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 10.02.2010-ம் தேதியன்று பிரதிவாதிக்கு, வாதி வங்கி கடன்

வழங்க அனுமதித்த Sanction Memorandum-த்தின் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 20.04.2013-ம் தேதியன்று வாதி வங்கியிடம், 1-ம் பிரதிவாதி பிறப்பித்து கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 20.04.2013-ம் தேதியன்று வாதி வங்கியிடம், 1-ம் பிரதிவாதி பிறப்பித்து கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 11.04.2016-ம் தேதியன்று வாதி வங்கியிடம், பிரதிவாதிகள் பிறப்பித்து கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் அசல் வா.சா.ஆ.6 ஆகவும், 10.03.2019-ம் தேதியன்று வாதி வங்கியிடம், பிரதிவாதிகள் பிறப்பித்து கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் அசல் வா.சா.ஆ.7 ஆகவும், 30.12.2021-ம் தேதியன்று வாதி வங்கியிடம், பிரதிவாதிகள் பிறப்பித்து கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் அசல் வா.சா.ஆ.8 ஆகவும், 20.01.2023-ம் தேதியன்று வாதி வங்கியின் கணக்கு விபரப்பட்டியலின் உண்மை நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்களிலிருந்து வாதி வங்கியிடமிருந்து பிரதிவாதிகள் கல்வி கடன் பெற்றுள்ளரர் என்பதுவும், மேற்படி தொகையை வட்டியுடன் திரும்ப செலுத்தவில்லை என்பதும் வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

8. மேலும், பிரதிவாதிகளானவர்கள் மேற்படி கடன் தொகை மற்றும் அதற்கான வட்டியை வாதி பிரதிவாதிகளிடம் நேரிலும், வகையாட்கள் மூலமாகவும் கேட்டும், பிரதிவாதிகளானவர்கள் நாளது தேதி வரை மேற்படி அசல் தொகை மற்றும் அதற்கான வட்டித்தொகையை வாதிக்கு செலுத்தவில்லை என்பதை வா.சா.1-ன் சாட்சியத்தின் மூலம் அறிய முடிகிறது.

9. மேலும், இந்நீதிமன்றம் மூலம் அனுப்பப்பட்ட அழைப்பாணைகள் சார்பு செய்ய வந்தநிலையில் பிரதிவாதிகள் அழைப்பாணைகளை பெற்றுக்கொள்ளாமலும், நீதிமன்றத்தில் ஆஜராகாததால், வாதியின் வழக்கு உண்மை என்ற அனுமானமே மேலெழுகிறது. உண்மையிலேயே பிரதிவாதிகளுக்கு நல்ல கட்சி இருந்திருந்தால் இந்த வழக்கில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்து அதற்கான சாட்சி மற்றும் சான்றாவணங்களை நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்திருப்பார். ஆனால் வழக்கில் நல்ல கட்சி இல்லாததால்தான் பிரதிவாதிகள் ஆஜராகவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வாதி தரப்பு வழக்கானது வாதி தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் வாதி

கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இவ்வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் ரூ.2,55,867/-ம், அதில் அசல் தொகை ரூ.60,000/-க்கு வழக்குரை தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் நாள் வரை 6% பின்வட்டியும் செலுத்த வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 01-ஆம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒப்பம்/) K.நம்பிராஜன்
சார்பு நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

<u>**வாதி தரப்பு சாட்சி**</u> -

வா.சா.1 - அடோனி பிரைனார்ட் டேனியல் (வங்கி கிளை மேலாளர்)

<u>**வாதி தரப்பு சான்றாவணங்கள்**</u> -

| | | | |
|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 05.12.2009 | வாதி வங்கியிடம் பிரதிவாதி கொடுத்த கடன் விண்ணப்பத்தின் அசல் |
| வ | வா.சா.ஆ.2 | 10.02.2010 | வாதி வங்கியிடம் பிரதிவாதி பிறப்பித்து கொடுத்த கொதுவை ஒப்பந்ததின் அசல் |
| | வா.சா.ஆ.3 | 10.02.2010 | பிரதிவாதிக்கு வாதி வங்கி கடன் வழங்க அனுமதித்த Sanction Memorandum-த்தின் அசல் |
| | வா.சா.ஆ.4 | 20.04.2013 | வாதி வங்கியிடம் 1-ம் பிரதிவாதி பிறப்பித்து கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் அசல் |
| | வா.சா.ஆ.5 | 20.04.2013 | வாதி வங்கியிடம், 2-ம் பிரதிவாதி பிறப்பித்து கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் அசல் |
| | வா.சா.ஆ.6 | 11.04.2016 | வாதி வங்கியிடம், பிரதிவாதிகள் பிறப்பித்து கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.7 | 10.03.2019 | வாதி வங்கியிடம், பிரதிவாதிகள் பிறப்பித்து கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் அசல் |
| வா.சா.ஆ.8 | 30.12.2021 | வாதி வங்கியிடம், பிரதிவாதிகள் பிறப்பித்து கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் அசல் |
| வா.சா.ஆ.9 | 20.01.2023 | வாதி வங்கியின் கணக்கு விபரப்பட்டியல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் -**இல்லை

(ஒப்பம்/) K.நம்பிராஜன்
சார்பு நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

/ உண்மை நகல் /

K NAMBIRAJAN
Digitally signed by K NAMBIRAJAN
Date: 2023.12.01 17:45:15 +1200

சார்பு நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

அ.வ.எண்.398/2023

அசல்/வரைவு தீர்ப்புரை

நாள்-01.12.2023.